# 13 ஜூலை 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற மனிதர்கள்

### உச்சநீதிமன்றத்துக்கு 2 புதிய நீதிபதிகள் நியமனம்



- உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான கொலீஜியத்தின் பரிந்துரையின் அடிப்படையில், நீதிபதிகள் "உஜ்ஜால் புயான், எஸ்.வெங்கட்டநாராயண பாட்டீ" ஆகியோர் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.
- தெலங்கானா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த, நீதிபதி உஜ்ஜால் புயான், கேரள உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி எஸ்.வெங்கட்ட நாராயண பாட்டீ ஆகிய இருவருக்கும் பதவி உயர்வு வழங்கி உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்ற கொலீஜியம் கடந்த 5–ஆம் தேதி பரிந்துரைத்தது.
- இவ்விரு நீதிபதிகளும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக முறைப்படி பதவியேற்கும் நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 32–ஆக அதிகரிக்கும். உச்சநீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளின் பணியிடங்கள் 34 ஆகும்.

## செய்திகளில் இடம் பெற்ற இடங்கள்

### அமெரிக்காவில் இருந்து உதிரி பாகங்களை வாங்கி கிருஷ்ணகிரியில் புதுப்பிக்கப்பட்ட காமராஜர் பயன்படுத்திய கார், ஜூலை 15–ல் சென்னை காமராஜர் அரங்கில் நிறுத்தப்படும்




- தமிழக முதல்வராக 3 முறை பதவி வகித்தவர் காமராஜர் இவர் தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, டிவிஎஸ் குழும தொழிலதிபர் டி.வி.சுந்தரம், 1952– ல் அறிமுகமான 'செவ்ரோலெட் ஸ்டைல்லைன் டீலக்ஸ்' கருப்பு நிற காரை (எம்டிடி 2727) வழங்கினார்.
- இக்காரை முதல்வரான பின்னரும் காமராஜர் பயன்படுத்திவந்தார். காமராஜர் மறைவுக்குப் பின்னர் சென்னை காமராஜர் அரங்கத்தில் பொதுமக்கள் பார்வைக்கு இந்த கார் வைக்கப்பட்டது. பொலிவிழந்த இக்காரை புதுப்பிக்க காங்கிரஸ் கட்சியினர் திட்ட மிட்டனர். இதையடுத்து, கிருஷ்ணகிரியில் உள்ள பிரபல கார் பழுது நீக்கும் நிறுவனத்தின் மூலம் கார் புதுப்பிக்கப்பட்டது.

SHANMUGAM IAS ACADEMY

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நபார்டு கிராமப்புற இந்தியாவின் முதுகெலும்பு




- நபார்டு வங்கி மட்டுமல்ல, ஒரு பணியும் ஆகும்– அமித் ஷா கூறினார். மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித் ஷாஷ் 42வது நிறுவன தின விழாவில் விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டையை வழங்கினார்.
- அடுத்த 25 ஆண்டுகளில் நாட்டின் கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்த கூட்டுறவுடன் இணைந்து செயல்பட முடியும்.

# உச்சி மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள்

## ஆறாவது இந்தியா–அரபு கூட்டாண்மை மாநாடு புதுதில்லியில் 11–12 ஜூலை 2023 அன்று நடைபெற்றது.




- அரபு–இந்திய ஒத்துழைப்பு மன்றத்தின் கீழ் "முதலீடு, வர்த்தகம் மற்றும் சேவைகளில் புதிய எல்லைகள்" என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் அரபு நாடுகள் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.
- வெளியுறவு அமைச்சகம், இந்திய அரசு மற்றும் அரபு நாடுகளின் லீக் (LAS), இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (FICCI), அரபு வணிகர்களின் கூட்டமைப்பு (FAB) இணைந்து மாநாட்டை ஏற்பாடு செய்தன.
- கடந்த நிதியாண்டில் ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவின் மூன்றாவது பெரிய வர்த்தக கூட்டாளியாக இருந்தது.
- கடந்த நிதியாண்டில் இந்தியாவின் நான்காவது பெரிய கூட்டாளியாக சவுதி அரேபியா இருந்தது.

# விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

## ஐஐடி சென்னை இயக்குனர் வி.காமக்கொடி மற்றும் டாக்டர் எஸ்.ராஜசேகரன் ஆகியோருக்கு 'சர் ஜே.சி.போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டது.

- தரமணியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் இந்திய அறிவியல் கண்காணிப்பகம் சார்பில் 19வது ஆண்டு சர் ஜே.சி.போஸ் நினைவு விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

SHANMUGAM IAS ACADEMY



- இதில், சைபர் பாதுகாப்புத் துறையில் சிறந்த பங்களிப்பிற்காக சென்னை ஐஐடி இயக்குநர் "வி.காமகோடி" மற்றும் "டாக்டர்.எஸ்.ராஜசேகரன்" அவர்களுக்கு எலும்பியல் துறையில் அவரது பங்களிப்புக்காக சர்.ஜே.சி. போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது.

## விளையாட்டு

### பளுதூக்குதல் இந்தியாவுக்கு :13 பதக்கங்கள்



- நொய்டாவில் நடைபெறும் காமன்வெல்த் பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவுக்கு முதல் நாளில் 9 தங்கம், 4 வெள்ளி என 13 பதக்கங்கள் கிடைத்தன.
- **ஆடவர்:** ஜூனியர், சீனியர் என இரண்டிலுமே 55 கிலோ பிரிவில் முகுந்த் அஹர் (239), இளையோர் 49 கிலோ பிரிவில் தனுஷ் (192 கிலோ), இளையோர் 55 கிலோ பிரிவில் டாம்சு மீடெய் (229 கிலோ) தங்கப்பதக்கம் வென்றனர். யூத், ஜூனியர் இரண்டிலுமே 49 கிலோ பிரிவில் சனாபதி குருநாயுடு (228கிலோ), இளையோர் 49 கிலோ பிரிவில் கிஷோர் (174கிலோ) வெள்ளிப் பதக்கம் வென்றனர்.
- **மகளிர்:** ஜூனியர், சீனி இரண்டிலுமே 49 கிலோ பிரிவில் ஞானேஸ்ஸ்வரி யாதவ் (176 கிலோ), சீனியர் 45 கிலோ பிரிவில் கோமல் கோஹர் (114 கிலோ), ஜூனியர் 45 கிலோ பிரிவில் ஆஷ்மிதா (136 கிலோ), இளையோர் 40 கிலோ பிரிவில் ஜோஷ்னாசபர்(116கிலோ) தங்கம் வென்றனர். சீனியர் 49 கிலோ பிரிவில் ஜிலி தலபெஹரா )169 கிலோவெள்ளிப் பதக்கம் பெற்றார் (

### ஆசிய தடகளம்: அபிஷேக்குக்கு வெண்கலம்




- தாய்லாந்தில் தொடங்கிய ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அபிஷேக் பால், 10000 மீட்டர் நடைப் பந்தயத்தில் வெண்கலம் வென்று, இந்தியாவின் பதக்கக் கணக்கை தொடக்கி வைத்தார். அவர் பந்தய இலக்கை 29 நிமிஷம் 33.26 விநாடிகளில் எட்டி 3–ஆவதாக வந்தார்.
- ஜப்பானின் ரென் டஸாவா (29:18.44), கஜகஸ்தானின் கோயேச் கிமுடாய் ஷத்ரக் (29:31.36) ஆகியோர் முறையே தங்கம், வெள்ளி வென்றனர்.
- கடந்த 2019–ஆம் ஆண்டு ஆசிய தடகள சாம்பியன் ஷிப்பில் 7–ஆம் இடம் பிடித்த அபிஷேக், தற்போது 3–ஆவது இடத்துக்கு முன்னேறி அசத்தியிருக்கிறார்.

SHANMUGAM IAS ACADEMY

# கலை மற்றும் கலாச்சாரம்

## திருக்கோளூர் அகழாய்வில் கிட்டத்தட்ட 324 தொல் பொருட்களானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



- தூத்துக்குடி மாவட்டதில் உள்ள **ஆதிச்சநல்லூர்** மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மூதாதையோர் அல்லது முதுமக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் உள்ளதால் அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது வரை "**இடைக்கால நாணயங்கள், வெண்கல மோதிரம், வெண்கல வளையல், கண்ணாடி மணிகள், சுடுமண் சிலைகள், சுடுமண் மணிகள், கண்ணாடி வளையல் துண்டுகள், சீன பானை ஓடுகள்**" என கிட்டத்தட்ட 324 **தொல்பொருட்கள்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மேலும் கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த மத்திய பட்ஜெட் கூட்டத்தொடரில் ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுக்காக உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் **நிர்மலா சீதாராமன்** அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# அறிவியல் & தொழில்நுட்பம்

## எல்விஎம்–3 ராக்கெட் மூலம் சந்திரயான்–3 நாளை விண்ணில் ஏவப்படுகிறது



- நிலவின் தென்துருவத்தில் தரையிறக்கப்பட உள்ள "சந்திரயான்–3C" விண்கலம், "எல்விஎம்–3" ராக்கெட் மூலம் நாளை (ஜூலை 14) விண்ணில் செலுத்தப்படுகிறது.
- சந்திரயான்–3 விண்கலம் 3,900 கிலோ எடை கொண்டது. ஏற்கெனவே ஆர்பிட்டர் நிலவை சுற்றிவருவதால் இந்த முறை லேண்டர், ரோவர்கலன்கள் மட்டும் அனுப்பப்படுகிறது.
- இவை உந்துவிசைகலன் (Propulsion Module) மூலம் நிலவின் சுற்றுப்பாதைக்கு எடுத்துச்செல்லப்படும். அதன்பின் உந்து விசைகலனிருந்து லேண்டர் பிரிந்து நிலவில் மெதுவாக தரையிறக்கப்படும்.
- தொடர்ந்து லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் 14 நாட்கள் நிலவில் ஆய்வு மேற்கொள்ளும். இந்த விண்கலத்தில் மொத்தம் 7 ஆய்வுக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- இந்த திட்டம் வெற்றியடைந்தால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்குப் பின் நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4–வது நாடு மற்றும் தென்துருவத்துக்கு சென்ற முதல் நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும்.

SHANMUGAM IAS ACADEMY

- மேலும், சந்திரயான்-3 திட்ட இயக்குநரான பி.வீரமுத்து வேல் தமிழகத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு செய்திகள்

### புதிய மாணவர் விடுதி: முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



- சென்னையில் புதிய மாணவர் விடுதி கட்டும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.
- சென்னை சைதாப்பேட்டை எம். சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் காலியான இடம் உள்ளது.
- இந்த இடத்தில் ஒரு லட்சம் சதுர அடி பரப்பில் நவீன வசதிகளுடன் 10 தளங்களைக் கொண்ட மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.
- இந்த விடுதியானது, 484 மாணவர்கள் தங்குமளவுக்கு தரைத்தளம், 10 தளங்களுடன் கட்டப்படுகிறது. 121 தங்கும் அறைகள், நூலகம், உடற்பயிற்சிக் கூடம், பார்வையாளர் அறை, பன்னோக்கு அரங்கம் ஆகிய நவீன வசதிகளுடன் கட்டப்பட உள்ளது.
- எம்.சி.ராஜா கல்லூரி விடுதி: சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதியானது, 1961-ஆம் ஆண்டு டிசம்பர் 15- ஆம் தேதி அப்போதைய முதல்வர் காமராஜரால் திறக்கப்பட்டது.
- இதுவரையில் சுமார் 25 ஆயிரம் மாணவர்கள் விடுதியில் தங்கி உயர் கல்வி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாற்றுத் திறனாளிகள் நல உதவி: இ-சேவை மையத்தில் விண்ணப்பிக்கலாம்



- மாற்றுத்திறனாளிகள் நல உதவி பெற இனி இ-சேவை வழியாக விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இ- சேவை தளம் வழியாக மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பிப்பதற்கு தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- எனவே, இனிவரும் காலங்களில் மாற்றுத் திறனாளிகள், "கல்வி உதவித்தொகை, உதவி உபகரணங்கள், வங்கிக் கடன் மானிய விண்ணப்பம், திருமணத் தொகை, மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை "ஆகிய ஐந்து திட்டங்களுக்கான விண்ணப்பங்களை அருகில் உள்ள சேவை மையம் அல்லது http://www.tnesevai.tn.gov.in/ Citizen/Registration.aspx என்ற இணைய தளம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை விரைவில் முதல்வர் தொடங்கி வைப்பார்



- நெம்மேலியில் 150 எம். எல். டி. கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் விரைவில் முடிக்கப்பட்டு தமிழ்நாடு முதல்வரால் தொடங்கி வைக்கப்படும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.
- நிகழ்ச்சியில் அமைச்சர் நேரு பேசியது:
  சென்னை மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் வகையில் நெம்மேலியில் 150 எம்.எல்.டி. கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் விரைவில் முடிக்கப்பட்டு முதல்வரால் தொடங்கி வைக்கப்படவுள்ளது.
- மேலும், பேரூரில் 400 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் விரைவில் தொடங்கப்படவுள்ளது. சென்னையில் வசிக்கும் 85 லட்சம் பேருக்கு கடந்த 2021 ஆகஸ்ட் மாதம் முதல் 1,000 எம்.எல்.டி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து கூடுதலாக 250 எம்.எல்.டி. குடிநீர் வழங்குவதற்கான பணிகள் முடியும் தறுவாயில் உள்ளது.

## ரூ.358 கோடியில் 3,000 நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள்



- தமிழகத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்ட 3,000 குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக புதிய குடியிருப்புகளை அவர் திறந்தார். நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திட்டங்களில் ஒன்றான அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், சென்னை, செங்கல்பட்டு,வேலூர், தேனி, கன்னியாகுமரி என மொத்தம் ரூ.358.15 கோடியில் 3 ஆயிரத்து 10 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.
- இந்தக் குடியிருப்புகளை, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## பல்வேறு துறைகளை சேர்ந்த 3.30 லட்சம் புத்தகங்களுடன் மதுரையில் திறப்பு விழாவுக்கு தயாரான 'கலைஞர் நூலகம்'

- மதுரையில்ரூ.215 கோடியில் பிரம்மாண்டமாக உருவாகியுள்ள கலைஞர் நூலகக் கட்டிடம், 3.30 லட்சம் புத்தகங்களுடன் ஜூலை 15ல் திறப்பு விழாவுக்கு தயாராக உள்ளது.
- இந்த பிரம்மாண்ட நூலகம் தென்மாவட்ட மாணவர்கள், போட்டித் தேர்வுக்கு தயாரா வோர், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள், இலக்கிய, தொல்லியல் ஆர்வ லர்களுக்கு அறிவுப் புதையலாக திகழும் என்பது குறிப்பிடத்தக்கதது.

SHANMUGAM IAS ACADEMY

- கலைஞர் நூலகத்தில் கலை இலக்கியம், அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த நூல்கள் என சுமார் 3.30 லட்சம் புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன.
- இதன்மூலம் தமிழ் இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், கலை, அறிவி யல், தொழில் நுட்பங்கள் சார்ந்த ஆங்கிலப் புத்தகங்கள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், பயிற்சி ஏடுகள், விவசாயத் தொழிலுக்கான புத்தகங்கள், பிரத்யேகமாக குழந்தைகளை கவரும் புத்தகங்கள் உள்ளிட்ட எண்ணற்ற புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- வரலாற்று ஆய்வாளர்களுக்கான மிகப் பெரும் சான்றாதாரக் களஞ்சியமாக இந்த நூலகத்திலுள்ள அரிய நூல்கள் பிரிவு இருக்கும். எடுத்துக்காட்டாக, 1918–ல் வெளிவந்த 'ஜஸ்டிஸ்' ஆங்கில இதழ்களும், திராவிட இயக்கத் தலைவர்கள் வெளியிட்ட 50–க்கும் மேற்பட்ட இதழ்களும் இந்தப் பிரிவில் இடம்பெற்றுள்ளன.
- 1824–ல் வெளிவந்த சதுரகராதி முதல் பதிப்பு, லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தை அடுத்து மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் மட்டும்தான் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழகத்தின் முதல் விமானப் பயிற்சி மையத்தை அமைக்க DGCA ஒப்புதல் அளித்துள்ளது.

- சேலம் விமான நிலையத்தில் செயல்படும் EKVI விமானப் பயிற்சி அமைப்பிற்கு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகமானது(DGCA) தமிழகத்தில் ஒரு சிறப்பு விமானப் பயிற்சி மையத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்புதலின் மூலம் இந்த மையமானது இந்தியாவில் 36 ஆவது DGCA ஆல் அங்கீகரிக்கப்பட்ட பறக்கும் பயிற்சி மையம் மற்றும் தமிழகத்தின் முதல் பறக்கும் பயிற்சி மையம்(FTO) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தேசிய செய்திகள்

### இந்தியா மற்றும் வங்கதேசம் இடையிலான இருதரப்பு வர்த்தகமானது "ரூபாயில்" நடைபெற உள்ளதாக அறிவிப்பு.

- வங்கதேசத்தின் தலைநகரமான டாக்காவில், வங்கதேசம் வங்கி மற்றும் இந்திய உயர் ஆணையம் இணைந்து ஏற்பாடு செய்த வணிக ரீதியிலான பன்னாட்டு நிகழ்வில் இந்தியா மற்றும் வங்கதேசம் இடையிலான இருதரப்பு வர்த்தகமானது ரூபாயில் நடைப்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- வங்கதேசமானது தெற்காசியாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக நண்பனாக உள்ளது என்றும் இந்த முடிவின் மூலம் இந்த இருதரப்பு உறவானது மேலும் புதிய உச்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக வங்கதேச மத்திய வங்கியின் கவர்னர் ஜெனரல் அப்துர் ரூஃப் தாலுக்தார் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையமானது (IFSCA), IIML –EIC உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையமானது(IFSCA) உத்திரப் பிரதேசத்தில் உள்ள **நொய்டா** வளாகத்தில் உள்ள IIM **எண்டர்பிரைஸ் இன்குபேஷன் நிலையத்தில்** (EIC) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- FinTech மற்றும் TechFin நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், அந்த ஆதரவை வலுப்படுத்துவதற்கும், ஒத்துழைப்பு மற்றும் புரிதலுக்கான கட்டமைப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மேகாலயாவில் மின்சாரம் மற்றும் சுத்தமான ஆற்றல் உற்பத்தியை மேம்படுத்த மேகாலயா அரசும் NTPCயும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேகாலயா டிஸ்காமிற்கான பவர் போர்ட்ஃபோலியோ மேலாண்மை சேவைகள் (பிஎம்எஸ்), பம்ப் ஸ்டோரேஜ் பவர் பிளான்ட்களை (பிஎஸ்பி) அமைத்தல் மற்றும் மேகாலயா முழுவதும் மிதக்கும் சோலார் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## பேரிடர் மீட்புக்காக மாநிலங்களுக்கு ரூ.7,532 கோடியை வழங்கும் வரைவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையானது, **ஜூலை** 12 அன்று, **ரூ.** 7,532 **கோடியை** அந்தந்த மாநில பேரிடர் நிவாரண நிதியை (SDRF) 22 மாநில அரசுகளுக்கு வழங்கப்பட கூடிய நிவாரண வரைவு பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்த பட்டியலானது **மத்திய உள்துறை அமைச்சகத்தின்** பரிந்துரையின்படி விடுவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். **பேரிடர் மேலாண்மைச் சட்டம்** 2005 இன் பிரிவு 48 (1) (a) இன் கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் தனியான மாநில பேரிடர் மறுமொழி நிதியானது (SDRF) அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.